# பண்ணுருட்டி நகராட்சி ஆணையரின் செயல்முறைகள்
## முன்னிலை:- திருமதி.K.S. காஞ்சனா.,

ந.க.எண்.2524/2024/F1

நாள். 26.12.2025

பொருள் : மனைப்பிரிவு - பண்ணுருட்டி நகராட்சி - திருவதிகை கிராமம், வார்டு C, பிளாக் 10, நகரளவு எண்.3/25 (பழைய சர்வே எண். 347,344,346,345,357,357/2)-ல் 5735.ச.மீ. (அ) 1.41. ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் இணைய வழி கடிதம் ந.க.எண். YNFUQSJV/2024/TCP நாள்.10.12.2024.
2. நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரம் ஆவண எண்.4188/2024, நாள்.22.11.2024.
3. நகராட்சி பொறியாளர், பண்ணுருட்டி அவர்களின் குறிப்பு நாள்: 07.05.2025 மற்றும் 19.06.2025.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.07.05.2025.
5. இந்நகர் மன்ற தீர்மான எண்.868 , நாள்.30.06.2025.
6. திரு.அ.லட்சுமணசாமி விழுப்புரம் என்பவரின் விண்ணப்பம் நாள். 22.12.2025.

**************

உத்திரவு:-

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடிதத்தில் பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருவதிகை கிராமம், வார்டு C , பிளாக்-10, நகரளவு எண்.3/25 (பழைய சர்வே எண். 347,344,346,345,357,357/2)-ல் 5735 ச.மீ. (அ) 1.41 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண்.171/24 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் மனுதாரரின் கடிதத்தில் மனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரம் ஆவண எண். 4188/24, நாள் 22.11.2024-ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளுக்கான குடிநீர் குழாய் அமைக்கும் பணி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் தெரு விளக்கு வசதிக்கான கட்டணங்கள் பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனைப்பிரிவுதாரரால் கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | தொகை | கட்டணம் செலுத்திய விவரம் |
|---|---|---|---|
| 1 | வளர்ச்சி கட்டணம் (குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி சிறு பாலம் மற்றும் தெருவிளக்கு வசதி) | ரூ.7,85,000/- | செ.சீ.எண்.095/001/1/25-26/0002058 நாள்.12.05.2025 (நகராட்சி கருவூலம்) |
| 2 | மனைப்பிரிவு அனுமதி கட்டணம் | ரூ.15,000/- | CH.NO.0011794 நாள்.19.12.25 |
| 3 | கூராய்வு கட்டணம் 1.TNCD &BR விதிகள் 2019 Part II பிரிவு 7(2)(II) -ன்படி 1ச.மீ ரூ.1.50. | ரூ.29,000/- | CH.NO. 0011796 நாள்.19.12.25 |
| | 2. கொடி நாள் கட்டணம் | ரூ. 10,000/- | CH.NO. 0011794 நாள்.19.12.25 |
| 4 | 5 ஆண்டுகளுக்கு பின் திரும்ப பெறக்கூடிய வைப்பு தொகை (1 ஏக்கருக்கு 1.00 இலட்சம் வீதம்) | ரூ.1,50,000/- | CH.NO. 095/001/1/24-25/0011795 நாள்.19.12.25 |
| | மொத்தம் | ரூ. 9,89,000/- | |

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்திடவும் மற்றும் மேற்படி மனைப்பிரிவுவரைபடத்தில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள் 1561.09 ச.மீ இடத்தினை ஏற்கவும் பார்வை 6-ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண். 868 நாள்.30.06.2025 -ல் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வடகைலாசம் கிராமம், வார்டு C, பிளாக் 10, நகரளவு எண்.3/25 (பழைய சர்வே எண். 347,344,346,345,357,357/2)-ல் 5735 ச.மீ. (அ) 1.41 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண். 171/2024 (இணையதள ஒப்புதல்) பார்வை1-ல்காணும் கடிதத்தில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

Kstcanet 26/12/25

ஆணையாளர்,
பண்ணுருட்டி நகராட்சி.

<u>இணைப்பு:</u> மனைப்பிரிவு வரைபடம்-1.

<u>பெறுநர்:</u>
திரு.A. லட்சுமணசாமி,
93, மாம்பழப்பட்டு ரோடு,
விழுப்புரம்.

26.12.25

<u>நகல்:</u>

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர்.
2. சார்பதிவாளர் இணை -II, சார்பதிவாளர் அலுவலகம், பண்ணுருட்டி.
3. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பண்ணுருட்டி.